
# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 DECEMBER

மலர்: 9 இதழ்: 3 டிசம்பர் 2015 விலை: ரூ. 5



## மனித உரிமைகளை மீட்டுத் தந்த மக்கத்து மண்

இம்மண்ணின் மைந்தர்கள் அன்று சிந்திய வியர்வையும்
இரத்தமும் சதைத் துண்டுகளும் கொழுப்பும் வீண்போகவில்லை.
இஸ்லாம் என்ற உலகளாவிய விருக்ஷம் வளர உரமாயின அவை..
பாலை மணலில் அவர்கள் பதித்த காலடிச்சுவடுகள்
பலகோடி மக்கள் ஈடேற பாதை அமைத்தன பாரெங்கும்...

இறைவா, அவர்களைப் பொருந்திக் கொள்!

# தொலைந்து போன ஒட்டகம்

வறண்ட பாலைவனத்தில் ஒட்டகப் பயணம் மேற்கொண்டான் ஒரு மனிதன். நீண்ட பயணத்திற்குப் பிறகு வழியில் ஒரு மரத்தைக் கண்டதும் அதன் நிழலில் இளைப்பாறுவதற்காக இறங்கினான்.

பயணச் சோர்வு... ஆழ்ந்த நித்திரைக்கு ஆளானான் அவன்.

கண்விழித்துப் பார்த்தபோது அவன் மட்டுமே அங்கு இருந்ததைக் கண்டு திடுக்குற்றான்... ஆம், ஒட்டகத்தைக் காணவில்லை! ..

எழுந்தான்... ஓடினான்... தேடினான்... பலனில்லை..

பதறிப்போய்விட்டான். அதன் மீதல்லவா அவனது உணவும் தேவைகளும்?

என்ன செய்வது? எதுவும் அவனுக்குப் புலப்படவில்லை.

இனி நமக்கு வாழ்வேது! மரணமாக வேண்டியதுதான். தாகத்திற்குத் தண்ணீரோ உண்பதற்கு உணவோ எதுவுமில்லை! எல்லாம் அந்தப் பாழாய்ப்போன ஒட்டகத்தில்! அதுதான் தொலைந்துவிட்டதே! எங்கே போய்த் தேடுவது? எங்கே கிடைக்கப் போகிறது? - இவ்வாறு நிராசையின் உச்சகட்டத்தை அடைந்திருந்தான்.

அப்படியே அலைந்து திரிந்து களைத்து- மனம்நொந்து கடைசியில் ஒருமரத்தடிக்கு வந்து அதன் நிழலில் படுத்துச் சிறிது கண்ணயர்ந்து விடுகிறான்!

திடீரென ஏதோ அரவம் கேட்டு கண்விழித்தான். என்ன ஆச்சரியம்! அவனது ஒட்டகம் அங்கே நின்றுகொண்டிருந்தது! அவன் படுத்திருந்த மரத்தடியில் அதன் கடிவாளம் சிக்கிவிட்டிருந்தது!

திடீரென தன்முன்னால் அந்த ஒட்டகத்தைக் கண்டதும் திக்குமுக் காடிப் போனான் அவன்! அளவிலா ஆனந்தம் அவனுக்கு! அதன் யதார்த்த நிலையை எவராலும் கற்பனை செய்ய முடியாது!

மரணத்திற்குப் பிறகு வாழ்வு கிடைத்தது போன்ற மட்டில்லாத மகிழ்ச்சி அது! அப்படியொரு சூழ்நிலை யாருக்கு ஏற்பட்டதோ அவர்தான் அதை முழுமையாக உணர முடியும்.

உடனே ஒட்டகத்தின் கடிவாளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தவாறு சொன்னான்: இறைவா! நீதான் என் அடிமை., நான் உன் எஜமானன்,.-ஒட்டகம் கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றி சொல்லத்தான் நா உயர்த்தினான். இறைவா நீதான் நல்லுதவி செய்த எஜமானன் என்று புகழத்தான் நாடினான். ஆனால் மகிழ்ச்சிப் பெருக்கின் காரணத்தால் நா தடுமாறியது., வார்த்தை தவறியது!

பாவம் செய்த மனிதன் பின்னர் மனம் திருந்தி நல்வழிக்குத் திரும்புவது குறித்து நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனின் அன்பு உள்ளம் அந்தளவுக்கு மகிழ்ச்சி அடைகிறது என்பதைப் பின்வரும் நபிமொழி நமக்குக் கூறுகிறது:

”தன்னுடைய அடியான் பாவமீட்சி தேடி தன் பக்கம் மீளும்பொழுது அதுகுறித்து அல்லாஹ் அதிக மகிழ்ச்சி உடையவனாக இருக்கிறான்., ஒரு பொட்டல் பூமியில் தனது ஒட்டகத்தைத் தவறவிட்டிருந்த உங்களில் ஒருவர், திடீரென அது கிடைக்கப் பெற்றதும் அடையும் மகிழ்சியை விட அதிகமாக!”

இதை அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ரியாலுஸ்ஸாலிஹீன்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 DECEMBER

மலர்: 9 இதழ்: 3 டிசம்பர் 2015 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

சத்தியத்திற்கு எதிரான சித்திரவதைகள் 2
ஏற்கப்படும் பிரார்த்தனை 4
இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் பெண்மணி 5
ஆண்களில் இஸ்லாத்தை முதலில் ஏற்றவர் 8
அடிவாங்கியும் அடங்காத அழைப்புப்பணி!- 10
சமூகப் புரட்சிகளுக்கு உயிர்நாடி மந்திரம்- 12
சிறுவர்களில் முதல்வர் அலீ (ரலி) 15
அடிமைகளில் முதல்வர் பிலால்(ரலி) 17
அடிமைகளை விடுவித்த அபூபக்கர்(ரலி) 18
அடி உதைக்கு அடிபணியாத அடிமை! 19
அநீதிக்கு உள்ளானோரின் பிரார்த்தனை 22
எதிர்த்து நிற்க என்ன தடை?- 23
வாசகர் எண்ணம்

published from
**House of Peace,**
PO Box No.1726
# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,
Bangalore 560 017 - Ph. 9886001357


# சத்தியத்திற்கு எதிரான சித்திரவதைகள்

அங்கு அனாசாரங்களும் மூடநம்பிக்கைகளும் அநியாயங்களும் அட்டூழியங்களும் வெகுவாகப் பரவியிருந்தன. முன்னோர்கள் விட்டுச்சென்ற மூடமான பழக்கவழக்கங்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்தனர் மக்கள். யாரென்றே தெரியாதவர்களுக்கு எல்லாம் சிலைகள் வைத்து வணங்கினார்கள் அவர்கள். கடவுளின் பெயரால் புரோகிதர்கள் கற்பித்த மூடநம்பிக்கைகளையும் வீண் சடங்குகளையும் மறுகேள்வி கேட்காமல் பின்பற்றினார்கள். பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தனர், மனம்போன கணக்கில் மது குடித்தனர், மனித உயிர்களை துச்சமாக மதித்தனர், பெண்களை அடிமைகளாக நடத்தினர், சாதராண விஷயத்திற்காக பலஆண்டுகள் தொடராக சண்டை இட்டுக் கொண்டனர். அப்படிப்பட்ட மக்கா நகரில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாம் என்ற வாழ்வியல் கொள்கையை அறிமுகப்படுத்தி அதன்பால் மக்களை அழைத்தார்கள். உண்மையில் அது ஒரு சுயசீர்த்திருத்தக் கொள்கை. அதன் அடிப்படைகளை மிக நளினமான முறையில் எடுத்துரைத்தார்கள்.

● “ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்த நீங்கள் ஒருவருக்கு ஒருவர் சகோதரர்களே. குலமோ, இனமோ மொழியோ நிறமோ இடமோ உங்களைப் பிரித்துவிடக் கூடாது. உங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டும் சுரண்டிக் கொண்டும் மோசடி செய்தும் அமைதி இழந்து தவித்துக் கொண்டிருக்கும் என் சமுதாயமே! வாருங்கள் இதற்கொரு முடிவு கட்டுவோம்! ஒரு இனிய புதிய விடியலை நோக்கிப் பயணிப்போம்! இந்த குறிக்கோளை அடைய நீங்கள் மறந்துபோன சில உண்மைகளை நினைவூட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கவே நான் இறைவனால் அனுப்பப் பட்டுள்ளேன்.”

**மறுக்கமுடியாத உண்மைகள்**

● “நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய முதல் உண்மை எதுவெனில் இவ்வுலகத்தை படைத்த இறைவன் ஒரே ஒருவனே என்பதும் அவன் மட்டுமே நம் வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதுதான். அவன்தான் நமக்கு தன் புறத்திலிருந்து எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கி நம்மை பரிபாலித்துக் கொண்டிருக்கிறான். அவன் மட்டுமே நம் நன்றிக்கும் வணக்கத்திற்கும் தகுதியானவனும் நம் பிரார்த்தனைகளை ஏற்பவனும் ஆவான். அவனைத் தவிர மற்ற அனைத்துமே அவனது படைப்பினங்களே. அவற்றை வணங்குவதும் உயிரற்ற உணர்வற்ற பொருட்களை கடவுள் என்று அழைப்பதும் எல்லாம் இறைவனை சிறுமைப் படுத்தும் செயலும் வீணும் மோசடியும் ஆகும். எனவே பொய்யான தெய்வங்களை விட்டுவிட்டு உங்களைப் படைத்தவன்பால் வாருங்கள்.”



● “அடுத்த உண்மை - இவ்வுலகம் தற்காலிகமான ஒரு பரீட்சைக்கூடம் போன்றது. இதில் நீங்கள் இறைவனின் வழிகாட்டுதல்படி அவன் கூறும் நன்மைகளைச் செய்தும் அவன்

கூறும் தீமைகளில் இருந்து விலகியும் வாழ்ந்தீர்களானால் உங்கள் தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் அமைதியைக் காண முடியும். அவ்வாறு நீங்கள் படைத்தவனுக்குக் கட்டுப் பட்டு வாழ்ந்தீர்களானால் அதற்குப் பரிசாக அவன் மறுமையில் நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்கத்தில் உங்களைப் புகுத்துவான். மாறாக அவனுக்குக் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்தீர்களானால் அதற்கு தண்டனையாக மறுமையில் நரகத்தையும் வைத்துள்ளான்."

● "இந்த மறுக்கமுடியாத சத்தியங்களை ஏற்றுக் கொண்டு இறைவனிடம் திரும்புங்கள். அவன் நமக்காக வகுத்துத் தந்துள்ள அழகிய வாழ்க்கைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். பூமியை அமைதிப் பூங்காவாக மாற்றுவோம் வாருங்கள்."

எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத் திட்டத்தின் பால்தான் நபிகள் நாயகம் (ஸல்) மக்களை அழைத்தார்கள்.

## ஆனால் என்ன நடந்தது?

புரிந்து கொண்டவர்கள் இந்த உயர்ந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். முழுமூச்சாக அண்ணலாரோடு இணைந்து பாடுபட்டார்கள். கொண்ட கொள்கைக்காக தங்களின் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்தார்கள்.

ஆனால் இக்கொள்கையின் அருமையைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் பெரும்பான்மையாக இருந்தார்கள். இந்த இயக்கம் வெற்றி பெற்றால் அனைவரும் சுபிட்சமாக வாழலாம் என்பதைப் புரிந்து கொள்வதிலிருந்து சிலரை அவர்களுடைய தற்பெருமையும் சிலரை சுயநலமும் சிலரை ஆதிக்கபலமும் தடுத்தது. பெரும்பாலோரை முன்னோர்கள் எது செய்தாலும் சரியே என்ற குருட்டு நம்பிக்கை தடுத்தது!

ஆனால் முன்னோர்களின் பழக்கவழக்கங்களே சரி என்று மூடமாக நம்பியிருந்தவர்களும் கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்டிக் கொண்டிருந்தவர்களும் தங்களுக்கு எதிரியாக இக்கொள்கையைக் கண்டார்கள். ஆம், தங்கள் ஆதிக்கத்தை சீர்குலைத்து சின்னாபின்னமாக்கும் இஸ்லாத்தை எப்படி விட்டு வைக்க முடியும்? அதை முளையிலேயே கிள்ளி ஏறிய அனைத்து வழிமுறைகளையும் பிரயோகித்தார்கள்.

அன்றுவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளர், நம்பிக்கைக்கு உரியவர் என்றெல்லாம் பாராட்டிய மக்கள் அவருக்கு பைத்தியம் என்று பட்டம்சூட்டினார்கள் அவர்களையும், அவர்களது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களையும் சொல்லொனாத துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கினார்கள்.

உதாரணத்திற்காக ஓருசில சம்பவங்களை மட்டும் இங்கு காண்போம்:

● நபிகளார் பிரச்சாரம் செய்யும்போது அவரது முகத்தில் மண்ணை வாரித் தூவினார்கள். 'பைத்தியக்காரர்' 'சூனியக்காரர்" என்று வசை பாடினார்கள்.

● கஅபா ஆலயத்தின் அருகே அவர் தன் நெற்றியை தரையில் வைத்துத் தொழுது கொண்டு இருக்கும்போது அவரது தலைமீது அறுக்கப் பட்ட ஒட்டகத்தின் சாணத்தையும் இரத்தத்தையும் கழிவுப் பொருட்களையும் கொண்டுவந்து கொட்டி அவர் தம் தலையைத் தூக்க இயலாமல் தத்தளிப்பது கண்டு எள்ளி நகையாடினர்.

● அவர் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பிவைத்தார்கள். வீட்டிற்கு முன் கழிவுப் பொருட்களையும் குப்பைகளையும் கொட்டி வைத்தார்கள்.

- தாயி஁ப் என்ற இடத்தில் அவர் பிரச்சாரம் செய்யும் வேளை சிறுவர்களை ஏவிவிட்டு இரத்தம் சிந்த கல்லால் அடித்தார்கள்.
- இக்கொள்கையை ஏற்றுக் கொண்ட நலிந்தோர்களையும் அடிமைகளையும் கொன்று குவித்தார்கள். மூதாதையர்களின் மதங்களையும் கடவுளர்களையும் மதிக்காதவர்களுக்கு இதுதான் கதி என்று மக்களை அச்சுறுத்தினார்கள்.
- ஏக இறைவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன். அவனைத் தவிர எதுவும் வணக்கத்திற்கு உரியவை அல்ல (அரபியில் ‘லா இலாஹ இல்லல்லாஹ்) என்று கூறியமைக்காக பகல் முழுக்க பாலைவனத்து சுடுமணலில் வெற்றுமேனியில் கிடத்தி பாறாங்கற்களை ஏற்றினார்கள்.
- தண்ணீர் தொட்டிமுன் முழங்காலிட வைத்து தலையை நீரில் அழுத்தி மூச்சு முட்ட வைத்து சிலைவழிபாட்டுக்குத் திரும்புமாறு பணித்தார்கள்.
- பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் உடலில் சூடிட்டு தாய்மதம் திரும்ப வற்புறுத்தினார்கள்.
- இன்னும் இவைபோன்ற பல்வேறுவகையான சித்திரவதைகளும் ஊரெங்கும் அரங்கேறிக் கொண்டு இருந்தன.

# ஏற்கப்படும் பிரார்த்தனை

- “யாஅல்லாஹ்! நிச்சயமாக நான் உனது அடிமை, உனது அடிமையின் மகன், மற்றும் உனது அடிமைப் பெண்ணின் மகன். எனது நெற்றிப்பிடி உன் கையில் உள்ளது. அதனை உனது சட்டத்தின்படி நீ செயல்படுத்துகிறாய். எனக்கு நீதமான தீர்ப்பு வழங்குகிறாய். உனக்கு நீயே சூட்டிக்கொண்ட, உனது வேதத்தில் நீ இறக்கியருளிய, உனது படைப்பினங்களில் ஒருவருக்கு (நபிக்கு) நீ கற்றுக் கொடுத்த, உனது மறைவான ஞானத்தில் நீயே தேர்ந்தெடுத்துக் கொண்ட உன்னுடைய அனைத்துப் பெயர்களின் பொருட்டால் கேட்கிறேன். (இறைவா!) குர்ஆனை என் உள்ளத்தை பொலிவூட்டக் கூடியதாக, நெஞ்சின் ஒளியாக, கவலையை நீக்கக்கூடியதாக, துன்பத்தை போக்கக் கூடியதாக ஆக்குவாயாக!”

இந்த வார்த்தைகளடங்கிய துஆ(பிரார்த்தனை) ஏற்றுக்கொள்ளப்படும். அல்லாஹ் அவருடைய துயரங்களை நீக்கிவிட்டு அதற்குப் பகரமாக இன்பங்களையும் மகிழ்ச்சியையும் அளிப்பான். ஆதாரம்: அஹ்மத்

**பிரார்த்தனையும் தூய்மையான சம்பாத்தியமும்**

- ”ஒரு நீண்ட பயனத்தில் ஒருவன் இருக்கிறான். அவனுடைய தலை பரட்டையாகவும், அவன் புழுதியினால் அழுக்கடைந்தவனாகவும் இருக்கும் நிலையில் வானத்தை நோக்கி தம் இரு கரங்களையும் உயர்த்தியவனாக, இறைவா! இறைவா! எனப்பிரார்த்திக்கின்றான். (ஆனால்) அவனது உணவும் தடுக்கப்பட்டதாகும், குடிப்பவையும் தடுக்கப்பட்டதாகும், அவனது ஆடையும் தடுக்கப்பட்டதாகும், அவனோ தடுக்கப்பட்ட சம்பாத்தியத்திலேயே தோய்ந்துள்ளான் (இந்நிலையில்) அவனது பிரார்த்தனை எங்ஙணம் ஏற்றுக் கொள்ளப்படும்?”. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். - ஆதாரம்: முஸ்லிம்.

எனவே நமது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின் வட்டி, கள்ளக் கடத்தல், திருட்டு, மோசடி, பிறர் சொத்தை அபகரித்தல், தடுக்கப்பட்டவற்றை விற்றல், அதனோடு தொடர்பாயிருத்தல், தடுக்கப்பட்டவற்றை உண்ணுதல், பருகுதல்... போன்ற அனைத்து வகையான தடுக்கப்பட்ட செயல்களில் இருந்தும் விலகி இருத்தல் வேண்டும்.

# இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் பெண்மணி

நபிகளாரின் மனைவியான கதீஜா (ரலி) அவர்கள்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் இருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் நபர் ஆவார்.

## பக்குவமும் பாசமும் கொண்ட மனைவியாக...

கதீஜா (ரலி) அவர்களின் வயது 55 ஆகவும், நபி (ஸல்) அவர்களின் வயது 40 ஆகவும் இருந்த வேளை அது. நபி (ஸல்) அவர்கள், சீர்கெட்டு, வழிதவறி, இருளில் மூழ்கிக் கொண்டிருக்கும் சமுதாயத்தை எண்ணிக் கவலைப்படுகிறார்கள். அத்தகைய சமுதாயத்தைச் சீர் செய்வதெப்படி, அவர்களை ஒளியின்பால் இட்டுச் செல்வதெப்படி என்றெல்லாம் பலவாறு சிந்திக்கத் தலைப்பட்டார்கள். அவ்வேளை நபி (ஸல்) அவர்களது உள்ளத்திற்குத் தனிமை மிகவும் பிரியத்தைக் கொடுத்தது. எனவே, இறைவனை வணங்கி வழிபட அமைதியான தனிமையான இடம் நாடி ஹிராக் குகைக்குச் சென்றார்கள். அங்கு பல இரவுகள் தங்கி வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இவ்வாறு, நபி(ஸல்) அவர்கள் குகையில் தங்கி வணக்கத்தில் ஈடுபட்ட வேளையில் அவர்களுக்குத் தேவைப்படும் உணவுகளைத் தயார் செய்து கொடுக்கும் பணியை கதீஜா(ரலி) அவர்கள் மிகவும் கனிவுடன் செய்து வந்தார்கள். குகை, ஹிரா மலையின் உச்சியிலேயே அமைந்திருந்தது. பாதையோ மிகவும் கரடு முரடானதாகக் காணப்பட்டது. இப்படியிருந்தும் தமது முதுமைப் பருவத்தையும் பொருட்படுத்தாது சிரமத்துடன் நடந்து சென்று அன்னை கதீஜா(ரலி) அவர்கள் உணவளித்தது கணவன் மீது கொண்ட அளவிலா அன்புக்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஹிராக் குகையில் வணக்க வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்கள் முன் தோன்றி ‘இக்ர.்.’ (ஓதுவீராக!) என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “எனக்கு ஓதத் தெரியாது” என்றனர். பின்னர் நபி (ஸல்) அவர்களை இறுகக் கட்டித் தழுவினார்கள். இவ்வாறு மூன்று முறை செய்தார்கள். பின்னர் ஓதுவீராக என்று கூறி மீண்டும் நபி(ஸல்) அவர்களைக் கட்டித் தழுவிவிட்டு 96 ஆம் அத்தியாயமாகிய “அல்-அலக்” இன் முதல் ஐந்து வசனங்களையும் ஓதிக் காட்டினார்கள். அவற்றை நபி(ஸல்) அவர்களும் அப்படியே ஓதினார்கள். பின்பு ஜிப்ரீல்(அலை) அவர்கள் சென்று விட்டார்கள். இந்நிகழ்வால் அதிர்ச்சியடைந்து பயந்து நடுங்கிய நபி(ஸல்) அவர்கள் கதீஜா(ரலி) அவர்களிடம் வந்து “என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்” என்று கூறினார்கள்.

## அன்புக் கணவனுக்கு ஆறுதலாக....

கதீஜா(ரலி) அவர்கள் போர்த்திவிட்ட பின்னர் நபி(ஸல்) அவர்கள், நடந்த சம்பவத்தை விளக்கினார்கள் பின்னர் தமக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுவதாகவும் கூறினார்கள். அப்போது கதீஜா(ரலி) அவர்கள் தமது கணவருக்கு மிக அழகான முறையில் ஆறுதல் கூறி மன தைரியத்தை ஊட்டினார்கள். கதீஜா(ரலி) அவர்கள் கூறிய வார்த்தைகள் வருமாறு:

“அவ்வாறு கூறாதீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் ஒருபோதும் உங்களை இழிவுபடுத்த மாட்டான். நீங்கள் உங்கள் உறவினர்களுடன் இணங்கி வாழ்கிறீர்கள். (சிரமப்படுவோரின்) சுமைகளைச் சுமக்கிறீர்கள். ஏழைகளுக்காக உழைக்கிறீர்கள். விருந்தினரை உபசரிக்கிறீர்கள். சோதனைகளில் (சிக்கியோருக்கு) உதவி புரிகிறீர்கள்” என்று கூறி பயந்திருந்த உள்ளத்திற்கு உண்மையான வார்த்தைகளைக் கொண்டு ஆறுதல் கூறினார்கள்.

அதுமட்டுமல்ல, அந்நிகழ்ச்சியின் உண்மையான விளக்கம் என்னவென்பதைக் கேட்டறிய வேண்டும் என்பதற்காகத் தமது தந்தையின் சகோதரர் வறகா பின் நௌபல் என்பவரிடம் சென்று கேட்டறிந்து கொள்ளலாம் என்று ஆறுதல் கூறினார்கள்.

தனக்கு ஏதும் ஆபத்து வந்துவிடுமோ என்று நபி (ஸல்) அவர்கள் அஞ்சுவதாகக் கூறியபோது நபி (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட அருங் குணங்களையும் நல்லறங்களையும் சுட்டிக் காட்டிய விதமானது, அன்னை கதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் மரியாதையையும் தெளிவுபடுத்துகின்றது.

கதீஜா(ரலி) அவர்கள் இறைவன் மீது ஆணையிட்டு ‘இறைவன் நபி(ஸல்) அவர்களை ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டான்’ என்று ஆணித்தரமாகக் கூறியமை அன்னாரது இறை நம்பிக்கைக்குப் பெரும் சாட்சி.

இந்நிகழ்ச்சியின் உண்மையான விளக்கம் என்ன என்பதை அறியத் தம் கணவரை வேதம் அறிந்த ஒருவரிடம் அழைத்துச் சென்றமை கதீஜா(ரலி) அவர்களின் அறிவின் ஆழத்தைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. ஏனெனில், தன் குடும்பத்தில், சமுதாயத்தில், தனக்கு நெருக்கமான, நம்பிக்கையான எத்தனையோ பேர் இருந்தும் வேதமறிந்த ஒருவரிடம் அழைத்துச் சென்றுள்ளமை நிகழ்வின் யதார்த்தத்தை ஓரளவு புரிந்து கொள்ளும் மனப் பக்குவமும் அறிவும் கதீஜா(ரலி) அவர்களிடம் காணப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்நிகழ்ச்சியின் பின்னர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் ஒரு இறைத் தூதர் என்ற உண்மையை உணர்ந்து ஏற்றுக் கொண்டார்கள். எனவே, முஹம்மத்(ஸல்) அவர்களை நபி என்று ஏற்றுக் கொண்ட முதல் பெண்மணியாகக் கதீஜா (ரலி) அவர்கள் திகழ்கிறார்கள்.

எவ்விதச் சலனமுமின்றி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் மனிதராகிய கதீஜா(ரலி) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக நபி(ஸல்) அவர்களோடு தோளோடு தோள் நின்று உழைத்தார்கள். அவர்களின் த.்.வாக் களத்தில் தன்னையும் பங்காளியாக இணைத்துக் கொண்டார்கள். தமது செல்வத்தையெல்லாம் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் பிரச்சாரப் பணிக்காகவும் தியாகம் செய்தார்கள். இவ்வாறு இஸ்லாத்திற்காக உடலாலும் பொருளாலும் உள்ளத்தாலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். கதீஜா (ரலி) அவர்களின் சிறப்புப் பற்றி ஏராளமான நபிமொழிகள் காணப்படுகின்றன. அவற்றிற் சில வருமாறு:

## நபிகளாரின் நற்சான்றிதழ்

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், “மக்கள் என்னை நிராகரித்த போது அவர் என்னை ஏற்றுக் கொண்டார். மக்கள் என்னைப் பொய்யாக்கிய போது அவர் என்னை உண்மைப்படுத்தினார். மக்கள் எதையுமே எனக்குத் தராமற்

தடுத்துக் கொண்ட போது அவர் தமது சொத்துக்களை எல்லாம் எனக்காக அர்ப்பணித்தார்" (அஹ்மத், 16: 118)

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், "இவ்வுலகிற் சிறந்த பெண் மர்யம்(அலை) ஆவார். இவ்வுலகிற் சிறந்த மற்றொரு பெண் கதீஜா(ரலி) ஆவார்" (அறிவிப்பவர்: அலி (ரலி), ஆதாரம்: புகாரி 3432, முஸ்லிம் 4815)

● கதீஜா(ரலி) அவர்களின் குடும்பத்தினரை நபி(ஸல்) அவர்கள் மதித்து நடந்தார்கள்

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள், "கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பின் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களிடம் வருவதற்கு கதீஜா (ரலி) அவர்களின் சகோதரி ஹாலா பின்த் குவைலித் (ரலி) அவர்கள் அனுமதி கேட்டார்கள். அவருடைய குரல் கதீஜா (ரலி) அவர்களின் குரலைப் போன்று இருந்ததால் கதீஜா (ரலி) அவர்கள் அனுமதி கோருகிறார்கள் என்று எண்ணி நபி (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியுற்றார்கள். பிறகு அவருடைய சகோதரி என்று தெரிந்த போது 'என் இறைவனே! இவர் ஹாலா' என்று கூறினார்கள். (நூல்: புகாரி 382, முஸ்லிம் 4824)

### கதீஜா (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் ஸலாம் கூறல்

ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! இதோ கதீஜா. அவர் தன்னுடன் குழம்பு, உணவு, பானம் ஆகியவை நிறைந்த பாத்திரத்தை உங்களிடம் கொண்டு வந்துள்ளார். அவருக்கு என் சார்பாகவும் அவரின் இறைவன் சார்பாகவும் ஸலாமை எடுத்துச் சொல்லுங்கள். சொர்க்கத்தில் அவருக்கு சச்சரவு, துன்பங்கள் இல்லாத, முத்தாலான மாளிகையுண்டு என்ற நற்செய்தியையும் சொல்லுங்கள்" என்று கூறினார். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி), நூல்: புகாரி 3820, 7497, முஸ்லிம் 4817)

### மரணம்

நபி(ஸல்) அவர்களின் நபித்துவ வாழ்க்கையில் 10 வருடங்கள் வாழ்ந்து தமது 65 ஆம் வயதில் கி.பி. 621 இல் மரணித்தார்கள். அதே ஆண்டில்தான் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கைக்குப் பெரும் துணையாக இருந்த அவரது சிறிய தந்தை அபூ தாலிப் அவர்களும் மரணித்தார்கள். சிறிய தந்தையினதும் ஆருயிர் மனைவி கதீஜா(ரலி) அவர்களினதும் மரணத்தால் நபி(ஸல்) அவர்கள் சொல்லொணாத் துயரத்திற்காளானார்கள். நபி(ஸல்) அவர்கள் மட்டுமன்றி இஸ்லாமிய உலகமே சோகத்தில் மூழ்கியது. இஸ்லாமிய வரலாற்றில் இவ்வாண்டு ஆமுல் ஹுஸ்ன் (துக்க ஆண்டு) என அழைக்கப்படுகிறது.

# பிரார்த்தனைகள் மறுக்கப்படுவதில்லை

● உயர்ந்தவனாகிய உங்களின் இரட்சகன் வெட்கமுள்ளவன், சங்கையானவன் அவனிடம் இரு கைகளையும் உயர்த்தினால் (பிரார்த்தித்தால்) அவ்விரண்டையும் வெறுமையாக திருப்பி விட அவன் வெட்கப்படுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: சல்மான் (ரலி)

● மூவரின் துஆ(பிரார்த்தனை) அல்லாஹ்வினால் நிராகரிக்கப் படாது. பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு செய்யும் துஆ நோன்பாளியின் துஆ பிரயாணத்தில் இருக்கும் பயணியின் துஆ.' ஆதாரம்: திர்மிதி

# ஆண்களில் இஸ்லாத்தை முதலில் ஏற்றவர்

இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு கூட அபுபக்கர் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட நல்லலொழுக்கங்கள் பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்காக மக்களிடம் மிகவும் பிரபல்யமான மனிதராகத் திகழ்ந்தார்கள். பிரச்னைக்குரிய விஷயங்களில் மக்கள் இவரிடம் வந்து கலந்தாலோசனை செய்வதும் அவர் கூறக் கூடிய கருத்துக்களுக்கு அதிக மதிப்புக் கொடுக்கக் கூடியவர்களாகவும் மக்கத்து மக்கள் இவரைப் போற்றி வந்தார்கள். அன்றைக்கு மக்காவில் இருந்த மிகப் பெரிய குலத்தவர்களில் மிகவும் செல்வாக்குப் பெற்ற மதிப்புப் பெற்ற குடும்பத்தில் ஒருவராக குறிப்பாக மக்காவில் வசிக்கக் கூடிய குலங்களில் மிகவும் முதன்மை பெற்ற குலங்களில் ஒன்றில் பிறந்த அபுபக்கர் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

இஸ்லாத்தின் ஒளி மக்காவில் வீசும் முன்பே இறைத்தூதர் (ஸல்) அவர்களை அடிக்கடி பார்த்துப் பேசி வரும் வழக்கமுள்ளவராக அபுபக்கர் (ரலி) அவர்கள். இருந்தும் இஸ்லாமிய அழைப்பு முதன் முதலாக விடுக்கப்பட்ட அந்த நாட்களில் அவர் எமன் தேசத்திலிருந்தார். எமனிலிருந்து திரும்பி மக்கா திரும்பியவுடன் அபு ஜஹ்ல், உத்பா, ஷைபா போன்ற மக்காவின் மிகப் பிரபலங்கள் அவரைச் சென்று சந்தித்து இஸ்லாத்தைப் பற்றி விஷமப்பிரசாரம் செய்ய வந்தனர்.

“அபூதாலிப்பின் பாதுகாப்பில் வளரக் கூடிய அந்த அநாதை தன்னை ஒரு இறைத்தூதரென்று பிதற்றிக் கொண்டு திரிகின்றார். நாங்கள் உங்களுடைய வருகைக்காகத் தான் காத்திருக்கின்றோம். நீர் வந்தவுடன் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இன்னும் இதில் உம்முடைய ஆலோசனை என்ன என்பதையும் நாங்கள் அறிய மிக ஆவலாக இருக்கின்றோம்.” என்றனர் அவர்கள்.

செய்தியைக் கேள்விப்பட்ட அபுபக்கர் அவர்கள் தன்னைப் பார்க்க வந்த பெருந்தலைகளை விட்டு விட்டு தன் ஆருயிர்த் தோழரைக் காண விரைந்து செல்கின்றார்.

“தோழரே..! நான் கேள்விப்பட்ட செய்தி உண்மையா?’

“ஆம்!” என்றுரைத்தார் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்.

“உங்களுடைய அந்த அழைப்பின் அர்த்தம் என்ன?”

“லா இலாஹ இல்லல்லாஹ்! முஹம்மதுர் ரசூலுல்லாஹ்!” (வணக்கத்திற்கு உரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை மற்றும் முஹம்மது அல்லாஹ்வின் தூதர் ஆவார்) என்ற ஓரிறைக் கொள்கையின் தத்துவத்தை அபுபக்கர் அவர்களுக்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் விளக்கினார்கள்.

இஸ்லாத்தை பற்றி இதற்குப் பிந்தைய நாட்களில் கேள்விப்பட்ட அனைவரும் அந்தக் கொள்கையை முன்பு மறுத்து அல்லது தாமதப்படுத்தியோதான் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அபுபக்கர் அவர்களோ சத்தியத்தைக் கேட்டவுடனேயே சற்றும் தாமதியாமல் ஏற்றுக் கொண்டார்கள். எந்தவித சுணக்கமும் அவர்கள் காட்டவில்லை என்பது அவருக்கு இறைக் கொள்கையின் மீதுள்ள பற்றும் இன்னும் அதனைக் கொண்டு வந்த இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மீதிருந்த நம்பிக்கை மற்றும்

அன்பும் தான் காரணமாகும்.

அபுபக்கர்(ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் வரிசையில் அதாவது வயது வந்தோர்களின் வரிசையில் முதலாவது நபராகவும் இன்னும் சிறுவர்களின் வரிசையில் அலி(ரலி) அவர்கள் முதலாவது நபராகவும் இருந்தார்கள். இன்னும் கதீஜா (ரலி) அவர்கள் பெண்களில் முதலாவது நபராகவும் இருந்தார்கள். அடிமைகளில் ஜைத் பின் ஹாரிதா (ரலி) அவர்கள் முதலாவது நபராகவும் இருந்தார்கள்.

எப்பொழுது இஸ்லாத்தை அபுபக்கர் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டார்களோ அப்போதிருந்தேதான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக தனது உடல், பொருள், ஆவி, திறமைகள் அனைத்தையும் வழங்கினார்கள். அவரது வாழ்க்கை முழுவதுமே தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக மாசு மறுவில்லாமல் அவர் தன்னையே இழந்த சரித்திரச் சான்றுகளைத்தான் நாம் காண முடியும்.

இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமைக்காக ஏகப்பட்ட அடிமை முஸ்லிம்கள் அவர்களது எஜமானர்களால் துன்புறுத்தப்பட்ட பொழுது அந்தக் கொடுமையைச் சகிக்காது தன்னுடைய சொந்த செல்வத்தைக் கொடுத்து அந்த அடிமை வாழ்வு வாழ்ந்த முஸ்லிம்களை விடுதலை செய்த பண்பாளராக அபுபக்கர்(ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். இறுதிவரை நபிகளாரின் உற்ற தோழராக சத்தியப்பாதையில் அவரது சுக துக்கங்களில் முழுமையாக பங்கேற்றார்கள். மக்காவைத் துறந்து மதீனாவுக்கு நபிகளார் மேற்கொண்ட ஹிஜ்ரத் என்ற வரலாற்று சிறப்புமிக்க பயணத்தின்போதும் இறைமறுப்பாளர்கள் தொடுத்த போர்களின் போதும் மதீனாவின் அரசாட்சியின் போதும் நபிகளாரோடு முழுமையாக ஒத்துழைத்த அபூபக்கர்(ரலி) அவர்கள் நபிகளாரின் மறைவுக்குப் பின் மக்கள் தலைவரா(முதல் கலீ∴பாவா)கவும் பணியாற்றினார்கள்.

# விலைமதிக்க முடியாத தங்கம்

அடிமையாய் இருந்து இஸ்லாத்தை ஏற்றதனால் அவரது எஜமானன் உமய்யாவின் சித்தரவதைகளுக்கு ஆளாகினார் பிலால்(ரலி). அவர்களை விடுதலை செய்ய எண்ணிய அபூபக்கர்(ரலி) அவர்கள் அவரின் எஜமானிடம் பிலால்(ரலி) அவர்களை விலைக்கு கேட்கிறார்கள். பேரம் பேசி விலை 10 தங்க காசுகள் என்று முடிவாகியது.

கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாகி இருந்ததால் மிகவும் நலிந்து போயிருந்தார் பிலால். இந்த பலவீனமான அடிமையை இவ்வளவு விலைக்கு விற்றுவிட்டோமே என்று அவன் ரொம்பவே மகிழ்ந்து போயிருந்தான்.

விலையைக் கொடுத்தபின் பிலால்(ரலி) அவர்களை அபூபக்கர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்த பின் உமைய்யா எக்காளத்தில் கூறினான்: "இவரை நீர் ஒரு தங்கக் காசுக்கு கேட்டிருந்தாலும் நான் விற்றிருப்பேன்" என்று.

ஆனால் அபூபக்கர்(ரலி) அவர்கள் அவனுக்கு அளித்த பதில் அவனது எக்காளத்தை தரைமட்டமாக்கியது:

" பிலாலுக்காக வேண்டி நீ 1000 தங்கக் காசுகள் கேட்டிருந்தாலும் நான் தந்திருப்பேன்"

# அடிவாங்கியும் அடங்காத அழைப்புப்பணி!

இன்று உலக மக்கள் தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்களை தன்பால் ஈர்த்து அரவணைத்து நிற்கும் இந்த இஸ்லாம் என்ற சீர்திருத்தக் கொள்கை அவ்வளவு சுலபமாகப் பரவிடவில்லை. ஆரம்பம் முதலே எதிர்ப்புகளையும் அடக்குமுறைகளையும் சித்திரவதைகளையும் சந்தித்துதான் வளர்ந்து வந்திருக்கிறது. இந்த தியாக சரித்திரத்தின் சங்கிலித்தொடர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து தொடங்குகிறது....

ஆரம்ப மூன்று வருடங்கள் இஸ்லாத்தின் அழைப்புப் பிரச்சாரம் மிகவும் ரகசியமாகவே நடந்து வந்தது. நபிகளாரின் குடும்பத்தார் மற்றும் நண்பர்களில் நம்பிக்கைக்கு உரியவர்களிடம் மட்டுமே அழைப்பு நடந்து கொண்டிருந்தது. அந்த கால கட்டத்தில் அபுபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய அழைப்பிற்கான தனது பங்களிப்பையும் மிகவும் ரகசியமாகவே செய்து வந்தார்கள். அதன் நான்காவது வருடம் கீழக்காணும் வசனம் இறங்கியது.

உமக்குக் கட்டளையிடப் பட்டிருப்பதை வெளிப்படையாக அவர்களுக்கு அறிவிப்பீராக! இணைவைத்து வணங்குபவர்களை புறக்கணித்துவிடுவீராக! (திருக்குர்ஆன் 15:94)

இந்த வசனம் இறங்கியவுடன் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது ஏகத்துவப் பிரச்சாரத்தை வெளிப்படையாகச் செய்ய ஆரம்பித்தார்கள்.

இவ்வுலகைப் படைத்த இறைவனின் பிரதிநிதியாக நின்று மக்களை சீர்திருத்தம் செய்யும் பணியை இதுவரை சிலரிடம் மட்டும் செய்துவந்த நபிகளார் இனி அதை அனைத்து மக்களிடமும் செய்ய துணிவோடு துவங்கினார்கள்.

நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனை - நமக்கு வேண்டியதெல்லாம் அளவின்றி அருளி- நம்மீது கருணை சொரிந்துவரும் - ஏக இறைவனை வணங்கிவர மக்களை அழைத்தார்கள். அவன் வழங்கி வரும் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தி அவன் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தினார்கள். அவன் மட்டுமே நம் வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதையும் நம் பிரார்த்தனைகளை செவியேற்கவும் பதிலளிக்கவும் சக்தியுடையவன் என்பதையும் எடுத்துரைத்தார்கள். அவனல்லாது அனைத்துமே படைப்பினங்களே. படைத்த இறைவனை விட்டு விட்டு படைப்பினங்களை வணங்குவதை- முன்னோர் கற்பித்துச் சென்ற உருவச்சிலைகளை - கண்மூடித்தனமாக வணங்கி வரும் செயலை தவறு என்று சுட்டிக்காட்டினார்கள். அவை நம் வணக்கத்திற்கோ பிரார்த்தனைக்கோ தகுதியற்றவை என்பதை எடுத்துரைத்தார்கள்.

முன்னோர்கள் கற்பித்த மூடப் பழக்கவழக்கங்களில் மூழ்கிப் போயிருந்த மக்களுக்கு நபிகளாரின் சத்திய அழைப்பு கசந்தது. கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்டியும் அடிமைப்படுத்தியும் வைத்திருந்த இடைத்தரகர்களுக்கும் ஆதிக்க வர்க்கத்தினருக்கும் அது அதிகமாகக் கசந்தது. எரிச்சலூட்டியது. தங்கள் ஆதிக்கத்திற்கு வேட்டுவைக்கும் ஒரு இயக்கத்தை வளரவிடுவார்களா? முளையிலேயே கிள்ளி ஏறிய முனைந்தனர் அவர்கள். இஸ்லாத்திற்கு எதிராக பெரும் போர்ப் பிரகடனத்தை செய்தார்கள்.

இஸ்லாத்தின் அழைப்பானது தங்களது கடவுள்களுக்கு அவமரியாதையை ஏற்படுத்தி விட்டது தங்களது கடவுள்களின் பெருமை போய் விட்டது என்றும் குற்றம்சாட்டினார்கள். தொடர்ந்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது சொல்லொணாக் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

ஏக இறைவனை வழிபடுவதற்காக வேண்டி ஒரு தூய்மையான ஆலயமாக ஒரு காலத்தில் இப்ராஹீம் நபி (அலை) அவர்களால் இறைவனின் கட்டளைப்படி கட்டப்பட்ட ஆலயம் கஅபா. காலாகாலமாக சேர்ந்த சிலைகளால் நிறைந்து அந்த ஆலயம் இன்று தூய்மையை இழந்து கிடக்கிறது. தங்களது கடவுள்களின் கீர்த்திகளைப் பற்றியும் மக்காவின் அந்த க.ஃபா எல்லையில் உட்கார்ந்து கொண்டு அந்த குறைஷிகள் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் க.ஃபாவினுள் நுழைந்தார்கள்.

இதைக் கண்ட அவர்களது கோபம் இன்னும் தலைக்கேறியது. அதில் ஒருவன் எழுந்து வந்து

“நீர்தானா எங்களது கடவுளர்களை விமர்சித்துப் பேசித் திரிவது?” என்று கேட்டான்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களோ எந்த பயமுமின்றி “ஆம்! நான்தான்!” என்றார்கள்.

இதைக் கேட்ட அத்தனை குறைஷியர்களும் ஒட்டுமொத்தமாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது பாய்ந்தார்கள். அவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது கடுமையான தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டே “நீர்தானா எங்களது இத்தனை கடவுள்களுக்கும் பகரமாக ஒரே ஒரு கடவுளை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்?” என்று கேட்டுக் கொண்டு அடித்துக் கொண்டிருக்கும் போதே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது சுயநினைவை இழந்து மயங்கிக் கீழே விழுந்தார்கள்.

அந்தத் தருணத்தில் அபுபக்கர் (ரலி) அவர்கள் தனது ஆருயிர்த் தோழரை அந்த இஸ்லாத்தின் எதிரிகளிடமிருந்து காப்பாற்ற விரைந்து வந்தார்கள். அந்த மடையர்களிடம் கேட்டார்கள் : அல்லாஹ்தான் எனது இறைவன் அவன்தான் அகில உலகங்களையும் பரிபாலிக்கக் கூடியவன் என்று கூறியதற்காகவா அவரை நீங்கள் கொலை செய்யப் பார்க்கின்றீர்கள்? நீங்கள் அத்துமீறிய சமுதாயமாகவல்லவா இருக்கின்றீர்கள்? என்று கூறிக் கொண்டிருக்கும் போதே அவரையும் அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள் இப்பொழுது அபுபக்கர்(ரலி) அவர்களது மண்டை உடைந்து இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. இப்பொழுது அபுபக்கர் (ரலி) அவர்களது உறவினர்கள் விரைந்து வந்து எதிரிகளிடமிருந்து இருவரையும் காப்பாற்றுகின்றனர். தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்த அந்த நிலையிலும் அபூபக்கர் (ரலி) அவர்களது உதடுகள் தன்னைப் படைத்த இறைவனையும் திருத்தூதர்(ஸல்) அவர்களையும் கண்ணியப்படுத்திக் கொண்டே இருந்தது.


## நிர்வாக அறிவிப்பு

இதழ் கிடைக்கப்பெறாத வாசகர்கள் மற்றும் விநியோகம் செய்வோர் புகார் அளிக்க கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:

**09742899305 / 07353307054**

# சமூகப் புரட்சிகளுக்கு உயிர்நாடி மந்திரம்

பதினான்கு நூற்றாண்டுகளாக பாரெங்கும் ஊரெங்கும் சமூகப் புரட்சிகளைத் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஒப்பற்ற சாதனைக்கு சொந்தக்காரர் மாமனிதர் நபிகள் நாயகம்(ஸல்). அவர் கொண்டுவந்த திருக்குர்ஆனும் அவரது போதனைகளும் எங்கெல்லாம் சென்றடைகிறதோ அந்த இடங்களிலெல்லாம் மனித உரிமை மீட்பு, இனவெறி, ஜாதிவெறி, நிறவெறி ஒழிப்பு, மனித சமத்துவம் நிலைநாட்டல், பெண்ணுரிமைகள் மீட்பு வரதட்சணை, பெண்சிசுக்கொலை ஒழிப்பு, குடும்ப அமைப்பைப் பாதுகாத்தல், வழிபாட்டு உரிமை மீட்பு போன்ற பற்பல சமூகப் புரட்சிகளை உண்டாக்காமல் இருப்பதில்லை. இவரைப் பின்பற்றுவோரின் சிறப்பு பற்றி இறைவன் தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்:

7:157. (எனவே இன்று) அந்த அருளுக்குரியவர்கள் எத்தகையவர்களெனில், அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய இந்தத் தூதரைப் பின்பற்றுவார்கள் இவரைக் குறித்து அவர்களிடமுள்ள தவ்ராத்திலும், இன்ஜீலிலும் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். இவர் நன்மை செய்யுமாறு அவர்களை ஏவுகின்றார் தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார். மேலும், அவர்களுக்குத் தூய்மையானவற்றை அனுமதிக்கின்றார் தூய்மையில்லாதவற்றைத் தடை செய்கின்றார். மேலும், அவர்களின் மீதுள்ள சுமையை இறக்குகின்றார் அவர்களைப் பிணைத்திருந்த விலங்குகளையும் உடைத்தெறிகின்றார். எனவே எவர்கள் இந்நபி மீது நம்பிக்கை கொண்டு இவரைக் கண்ணியப்படுத்தி, உதவியும் புரிகின்றார்களோ, மேலும் இவருடன் இறக்கியருளப்பட்ட ஒளியினைப் பின்பற்றுகிறார்களோ அவர்களே வெற்றியாளர்களாவர்.

நபிகள் நாயகம் உயிரோடு இருக்கும்போதும் சரி இன்றும் சரி, அவர் நடத்திக் கொண்டிருக்கும் சமூகப் புரட்சிகளுக்கு ஆணிவேராக இருப்பது 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற அவரது ஓரிறைக் கொள்கை முழக்கமே. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கு தகுதி வாய்ந்தவன் யாரும் இல்லை என்பதே இதன் பொருள். 'அல்லாஹ்' என்பது இவ்வுலகைப் படைத்து பரிபாலித்துவரும் ஏக இறைவனைக் குறிக்கும் சொல்லாகும். சமூகத்தில் சீர்திருத்தம் ஏற்படுவதற்கும் ஒழுக்கம், அமைதி போன்றவை திரும்புவதற்கும் இதுவே உயிர்நாடி என்பதை சற்று சிந்தித்தால் உணரலாம். நபிகளார் கூறினார்கள்: "லா இலாஹ இல்லல்லாஹ் சொல்லுங்கள், வெற்றி அடையுங்கள்" என்று.

இவ்வுலகில் பாவங்களும் தீமைகளும் அதிகரிப்பதற்கும் அராஜகங்களும் அட்டூழியங்களும் ஆதிக்கம் செலுத்துவதற்கும் முக்கியக் காரணம் தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வுதான். தனிநபர்களில் இருந்து அரசாள்வோர் இதுவே நியதி.

**பாவங்களும் ஒழுக்கமின்மையும் வளர மூலகாரணம்:**

மனிதன் நல்லவனாக, நல்லொழுக்கம் உடையவனாக வாழவேண்டுமானால் அவனுள் இறையச்சம் என்பது இருக்கவேண்டும். அதாவது என்னைப் படைத்த இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டு இருக்கிறான்,

இவ்வாழ்க்கைக்குப் பிறகு அவனிடமே திரும்பவேண்டியது உள்ளது, அவன் என் நற்செயல்களுக்கு பரிசும் பாவங்களுக்கு தண்டனையும் வழங்க உள்ளான் - அதாவது அவனிடம் நான் எனது ஒவ்வொரு செயல்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டும் - என்ற பொறுப்புணர்வுக்கே இறையச்சம் என்று கூறப்படும். இது இல்லாதபட்சம் எந்தப் பாவத்தையும் செய்வதற்கு மனிதன் சற்றும் தயங்க மாட்டான்

இவ்வாறு இறையச்சம் இல்லாத தலைமுறைகள் உருவாகும்போது பாவம் செய்ய அஞ்சாத சமூகம் உருவெடுத்து அங்கு அமைதியின்மையும் கலவரங்களும் மேலோங்குகின்றன. இவை ஒருபுறம் நாட்டின் ஒழுக்க வீழ்ச்சிக்கு காரணமாகும்போது மறுபுறம் தவறான கடவுள் கொள்கை நாட்டில் மிகப்பெரும் இழப்புகளையும் விபரீதங்களையும் ஏற்படுத்துகிறது.

## கடவுளின் இலக்கணங்கள்

திருக்குர்ஆன் கீழ்கண்டவாறு கடவுளின் முக்கிய இலக்கணங்களை கூறுகிறது:

- **112: 1~4.** நபியே நீர் சொல்வீராக: அல்லாஹ் ஒரே ஒருவனே. அல்லாஹ் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் யாரையும் பெற்றெடுக்கவில்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை

- **2:186.** (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால் "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன் அவர்கள் என்னிடமே(பிரார்த்தித்துக்) கேட்கட்டும், என்னை நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்" என்று கூறுவீராக.

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்கு தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அதாவது ஏகனாகிய இறைவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். ஒப்பில்லாதவன். அவனது படைப்பினங்களைப் போல் மற்றவர்களை சார்ந்து இராதவன். தாய் தந்தை, மனைவி, மக்கள் என எந்த உறவுகளும் இல்லாத தனித்தவன். தன்னிகரற்றவன். அவனை எந்த இடைத்தரகர்களும் இன்றி நேரடியாக வணங்கலாம். அவனிடம் நேரடியாக நம் தேவைகளைக் கேட்டு பிரார்த்திக்கலாம் என்ற கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன மேற்படி வசனங்கள். இவையே நாம் வணங்குவதற்குத் தகுதி வாய்ந்த இறைவனின் உண்மை இலக்கணங்கள் என்பதை சிந்திப்போர் அறியலாம்.

## பிற ஆபத்துகள்:

இவ்விலக்கணங்களை ஆராயாமல் இறைவன் அல்லாதவற்றையெல்லாம் கடவுள் என்று நம்பி வழிபடும்போது எளிமையான வழிபாடு வியாபாரமாக்கப் படுகிறது. படைத்த இறைவனை வழிபடுவதற்கு எந்தப் பொருட்செலவும் தேவை இல்லை. எந்த தரகர்களும் தேவை இல்லை. எந்த வித வீண் சடங்குகளுக்கும் அங்கு இடமில்லை. ஆனால் படைத்தவனை விட்டு விட்டு போலி தெய்வங்களை வணங்க முற்படும்போது இறைவழிபாடு என்பது கடினமாக்கபடுகிறது. வீண் சடங்குகளும் மூட நம்பிக்கைகளும் இடைத்தரகர்களும் இடையே நுழைந்து இது மாபெரும் வியாபாரமாக்கப்படுகிறது. பாமரர்களின் சம்பாத்தியங்களும் செல்வங்களும் இடைத்தரகர்களால் கொள்ளையடிக்கப்படுகின்றன.

ஒரே இறைவனுக்கு பதிலாக பல போலிக் கடவுள்கள் வணங்கப்படும் நிலையில் ஒரே மனித குலம் பல ஜாதிகளாகவும் பிரிவுகளாகவும் கூறுபோடப்பட்டு மக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இந்நிலை மாற ஒரே வழி ஒன்றே குலம் ஒருவன் மட்டுமே இறைவன் என்ற கொள்கையை மக்கள் மனதில் வேரூன்றச் செய்வது மூலமே சாத்தியம். இதைத்தான் இறைவனின் இறுதித் தூதர் மூலமாக மறு அறிமுகம் செய்யப்பட்ட இஸ்லாம் என்ற மார்க்கம் உலகெங்கும் செய்து வருகிறது.

● கண்டதெல்லாம் கடவுள் என்று மக்கள் நம்பத் தலைப்படும் போது அதைச்சுற்றி இடைத்தரகர்கள் உருவாகிறார்கள். பின்னர் அவர்கள் சொல்வதுதான் சட்டம் என்றாகிறது. அவர்கள் தம் மனம் போனபடி மக்களை ஏய்த்து தம் வயிற்றை நிரப்பிக் கொள்ள பாவ பரிகாரம், தோஷ பரிகாரம் என்றெல்லாம் பெயர் சொல்லி பாமரர்களின் சம்பாத்தியங்களையும் செல்வங்களையும் கொள்ளை அடிக்கிறார்கள்.

● ஒரே இறைவனுக்கு பதிலாக பல போலிக் கடவுள்கள் வணங்கப்படும் நிலையில் ஒரே மனித குலம் பல ஜாதிகளாகவும் பிரிவுகளாகவும் கூறுபோடப்பட்டு மக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இந்நிலை மாற ஒரே வழி ஒன்றே குலம் ஒருவன் மட்டுமே இறைவன் என்ற கொள்கையை மக்கள் மனதில் வேரூன்றச் செய்வது மூலமே சாத்தியம். இதைத்தான் இறைவனின் இறுதித் தூதர் மக்காவில் மறு அறிமுகம் செய்தார்கள்.

# பேராசைக்காரர்கள் சிந்திக்க...

● கோடிகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆக இருந்தாலும் இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்ற தீராத பேராசை!

● கொலைகளும் கொள்ளைகளும் நடத்தி பதவிப் படிகள் பல ஏறினாலும் இன்னும் உயர் பதவிகளை அடையத்துடிக்கும் கொலை வெறி!

இது உயர்ந்த நிலைகளை அடைந்தோரின் நிலைப்பாடு மட்டும் அல்ல... சாதாரண மனிதர்கள் பெரும்பாலோரிடமும் காணப்படும் பண்பே இது!

இதற்கு காரணம் என்ன?

வாழ்வின் உண்மை நிலையைப் பற்றி விரிவாக அவர்கள் சிந்திக்காததே என்பதை ஆராய்வோர் அறியலாம். தன் பார்வைக்கு எட்டியது மட்டுமே இவர்களைப் பொறுத்தவரையில் உலகம் என்பது ... இதற்கப்பால் ஒன்றுமே இல்லை என்று கிணற்றுத் தவளைகளைப் போன்ற குறுகிய சிந்தனையே இதற்குக் காரணம். தான் வாழும்வரை மட்டுமே உலகத்தின் ஆயுள் என்பதும் அதற்கு முன்னர் உலகம் இருந்ததில்லை என்பது அதற்குப் பின்னர் உலகம் இருக்கப்போவதில்லை என்பதும் இவர்களின் சித்தாந்தம்!

இப்படிப்பட்ட மக்களைப் பற்றி திருக்குர்ஆனில் இறைவன் கூறுவதைப் பாருங்கள்:

**30:7. மக்கள் உலக வாழ்வின் புறத்தோற்றத்தை மட்டுமே அறிகின்றனர். மறுமையைப் பற்றி அவர்கள் அலட்சியமாக இருக்கின்றனர்.**

**30:8. என்ன, அவர்கள் தங்களைப்பற்றி என்றைக் கேனும் சிந்தித்ததில்லையா? இறைவன் வானங்களையும் பூமியையும் அவற்றிற்கிடையே உள்ள அனைத்துப் பொருட்களையும் சத்தியத்துடனும் ஒரு குறிப்பிட்ட தவணைக்காகவுமே படைத்துள்ளான். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் தங்கள் அதிபதியின் சந்திப்பை நிராகரிப்பவர்களாய் இருக்கின்றனர்.**

# சிறுவர்களில் முதல்வர் அலீ (ரலி)

தாய்தந்தையரை இழந்திருந்த நபிகளாரை சிறுவயது முதல் பரிபாலித்து வந்தவர் அவரது சிறிய தந்தையான அபூதாலிப் அவர்கள். அவர்களின் மகன்தான் அலீ (ரலி) அவர்கள். அலீ (ரலி) அவர்கள் பிறந்த பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நல்ல வாலிப் பருவத்தில் இருந்தார்கள். அப்பொழுது இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு மனைவியும் குழந்தைகளும் இருந்தார்கள். எனவே அப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அலீ(ரலி) அவர்களை தன்னுடன் வைத்துப் பராமரித்துக் கொண்டார்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தனது தூதுத்துவப் பணியை ஆரம்பம் செய்திருந்த போது அலீ(ரலி) அவர்களுக்கு ஒன்பது வயதே ஆகியிருந்தது. ஒருநாள் அலீ(ரலி) அவர்கள் வீட்டில் இருந்த பொழுது இறைத்தூதர்(ஸல்) அவர்களும் அவர்களது துணைவியாரும் தரையில் தலையை வைத்து (சுஜூது நிலையில்) தொழுது கொண்டு இருப்பதைக் காண்கின்றார்கள். அவர்கள் அப்பொழுது அல்லாஹ்வைப் புகழ்ந்த வண்ணமும் இருந்தார்கள். இந்த அதிசய நிகழ்ச்சியை இமை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்த அலீ(ரலி) அவர்கள் இதுபோன்றதொரு நிகழ்வை நாம் எங்கும் எப்பொழுதும் கண்டதில்லையே என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தொழுது முடித்த பின் அவர்களை அணுகிய அலீ (ரலி) அவர்கள் சற்று முன் நான் பார்த்த காட்சிக்கு என்ன அர்த்தம் என்று வினவினார்கள்.

"நாங்கள் நம்மைப் படைத்த வல்லோனாகிய ஏகனாகிய அல்லாஹ்வைத் தொழுது கொண்டிருந்தோம்" என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். தொடர்ந்து

"நான் உங்களுக்கு ஒரு அறிவுரை ஒன்றைக் கூறுகின்றேன். நீங்கள் எப்பொழுதும் அந்த லாத் உஸ்ஸா அல்லது வேறு எந்த சிலைகளுக்கும் சிர வணக்கம் செய்யாதீர்கள்... சற்றுமுன் நீங்கள் பார்த்தீர்களே..! அதைப் போல உங்களைப் படைத்த ஏகனுக்கு மட்டும் சிர வணக்கம் செய்யுங்கள்" என்று கூறினார்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்கள்.

"நான் இதுபோல எப்பொழுதும் கேள்விப்பட்டதில்லையே" என்ற அலீ(ரலி) அவர்கள், "நான் எனது தந்தையிடம் முதலில் இது பற்றிக் கலந்து விட்டு வந்து உங்களுக்குப் பதில் சொல்கின்றேன்" என்று கூறினார்கள்

'அலீயே..! நீங்கள் இங்கு பார்த்ததை யாரிடமும் இப்போதைக்குக் கூற வேண்டாம். நீங்களாகவே சிந்தியுங்கள் அதனை உங்களது மனதிலேயே வைத்துக் கொள்ளுங்கள்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அறிவுரை கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரை அவருக்கு நல்லதாகவே பட்டது. எனவே அதுபற்றிச் சிந்திக்கலானார்கள். சிந்தனைத் தெளிவுக்குப் பின்னர் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடைய கருத்தினை ஏற்றுக் கொண்டார்கள். அடுத்த நாள் காலை இஸ்லாத்தினைத் தனது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டார்கள். இளைஞர்களிலேயே அலீ(ரலி) அவர்கள்தான் முதன் முதலில் இஸ்லாத்தினைத் தனது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்ட வரலாற்றுப் பெருமை கொண்டவர்கள்.

## இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் நெருக்கம்

அலீ(ரலி) அவர்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வளர்ந்தார்கள். அதன் காரணமாக வாழ்க்கை பற்றியும் இன்னும் இறைநம்பிக்கை பற்றியும் அதன் அடிப்படைகள் பற்றியும் மிகவும் ஆழமான அறிவைப் பெற்றார்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மீது அலீ(ரலி) அவர்கள் தீராத அன்பு கொண்டிருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவைத் துறந்து ஹிஜ்ரத் கிளம்பிய அன்றைய இரவில் இறைத்தூதர்(ஸல்) அவர்களைக் கொன்று விடுவதற்கு குறைஷிகள் அவர்களது வீட்டைச் சுற்றிலும் தயாராகக் காத்திருந்தார்கள். வீட்டைச் சுற்றிலும் எங்கும் வாள்கள் பளபளத்துக் கொண்டிருந்தன. காலையில் வீட்டை விட்டு வெளியே வரும் இறைத்தூதர்(ஸல்) அவர்களை கண்ட துண்டமாக வெட்டிக் குதறுவதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது இறைத்தூதர்(ஸல்) அலீ(ரலி) அவர்களைப் பார்த்து நீங்கள் எனது படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். நான் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறி மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்கின்றேன் என்று கூறினார்கள். தன்னிடம் அமானிதமாக மக்கள் ஒப்படைத்திருந்த பொருட்களை உரியவர்களுக்குக் கொடுத்துவிட்டு மதீனாவுக்குக் கிளம்பி வருமாறு பொறுப்பு சட்டியபின் நபியவர்கள் கிளம்பிச் சென்றார்கள். நபியவர்கள் அற்புதகரமாக வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றதை அறியாத எதிரிகள் காலையில் வீட்டிற்குள் நுழைந்தபோது அவரது படுக்கையில் அலீ(ரலி) அவர்களைக்கண்டு அதிர்ச்சியுற்றார்கள். தாங்கள் ஏமாற்றப்பட்டதை அப்போதுதான் அறிந்தார்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தனது கடைசி மகளும் தனது அன்பிற்குப் பாத்திரமான மகள் ஃபாத்திமா(ரலி) அவர்களை அலீ(ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். அலீ(ரலி) அவர்கள் தனக்குக் கிடைத்த கௌரவத்தை உணர்ந்தவர்களாக நடந்து கொண்டார்கள். அலீ (ரலி) மற்றும் ஃபாத்திமா (ரலி) தம்பதியினருக்கு ஹஸன் மற்றும் ஹுஸைன் என்ற இரு மகன்கள் பிறந்தனர். அவர்களை தனது சொந்த மகன்களைப் போல இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பாசமழை பொழிந்தார்கள்.

இறைவசனங்களை எழுதக் கூடிய எழுத்தாளராகவும் அலீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களால் அனுப்பப்படக் கூடிய கடிதங்களை எழுதக் கூடிய எழுத்தராகவும் அலீ(ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்களால் சொர்க்கத்திற்கு நன்மாரயங் கூறப்பட்ட 10 நன்மக்களில் அலீ(ரலி) அவர்களும் ஒருவராவார். நபிகளாரின் மறைவுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்காவது மக்கள் தலைவர் (கலீஃபா) இவராவார். இவருக்கு முன் ஆட்சி செலுத்திய மூன்று கலீபாக்களும் அலீ(ரலி) அவர்களிடம் நிர்வாக விஷயங்களில் ஆலோசனை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

# பாவமன்னிப்பு எதுவரை?

உமர்(ரலி)அவர்கள்அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: "நிச்சமாக இறைவன் மனிதனின் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறான், அம்மனிதனின் உயிர் ஊசலாடும் கட்டத்தை அடையாதிருக்கும் வரையில்!" (நூல்:திர்மிதி)

# அடிமைகளில் முதல்வர் பிலால்(ரலி)

அடிமைத்துவம் என்பது உலகில் பரவலாக இருந்த காலகட்டம் அது. அராபியாவும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இஸ்லாம் வளர வளர உலகெங்கும் அடிமைத்துவம் படிப்படியாக ஒழிக்கப்பட்டு சுதந்திரமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பது வேறு விடயம்.

பிலால் (ரலி) அவர்கள் அபிஷீனிய நாட்டைச் சார்ந்த நீக்ரோ அடிமையாவார். சில பேரித்தம் பழங்களுக்கு அடிமையாய் இருந்தவர். பிலால் (ரலி)யின் எஜமான் உமைய்யா பின் கல.்.ப் என்பவன். இவன் பனு ஜுமஹ் வம்சத்தை சார்ந்தவன்.

பிலால் (ரலி) அவர்களின் தந்தைப் பெயர் ரபாஹ். தாயாரின் பெயர் ஹமாமா இவரும் அடிமையாய் இருந்தார்கள். அடிமையாயிருந்த பிலால் (ரலி) ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்தார். அன்றைய அரபு உலகில் புரையோடிப் போயிருந்த பல தெய்வக் கொள்கையிலும், புரோகிதத்திலும், தனிமனித வழிபாட்டிலும் திளைத்திருந்த மக்களிடம் நபி(ஸல்) அவர்கள் ‘படைத்தவனை மட்டுமே வணங்குவோம், இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வணங்குவோம்’ என்ற ஏகத்துவக் கொள்கையை எடுத்துரைத்த போது அதனை இதயப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்களில் பிலால் (ரலி) அவர்களும் ஒருவர். பெரும்பான்மை சத்தியமறுப்பாளர்களுக்கு நடுவில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்தது. பெரும் கொடுமைக்கும் சித்தரவதைக்கும் அவர்கள் ஆளாயினர்.

## சித்திரவதைகளின் உச்ச நிலை

வலுவான இஸ்லாமியக் கடவுள் கொள்கைக்கு எதிரில் இணைவைப்பும், தனிமனித வழிபாட்டின் அனுஷ்டானங்களும் புரோகிதமும் தவிடு பொடியாவதைக் கண்டு வெகுண்ட மக்கத்து குறைஷிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோரைக் கொடுமைப் படுத்துவதில் சிறிதும் சளைக்கவில்லை. உமைய்யா பின் கல.்.ப் தன் அடிமையான பிலால்(ரலி) அவர்கள் மீது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக கடும் கோபம் கொண்டான். தம்வம்சத்தாரின் துணையுடன் அவரை மிகவும் கொடுமைப் படுத்தினான். சுடும் பாலைவன மணலில் அவரை ஆடையின்றி கிடத்தி நெஞ்சில் பாறாங்கல்லை வைத்து பிலால் (ரலி) அவர்கள் சற்றும் அசைய முடியாதவாறு செய்து துன்புறுத்தினான். சித்தரவதையின் உச்சநிலையை உணர்ந்த போதும் பிலால் (ரலி) அவர்கள் தான் ஏற்றிருந்த ஏகத்துவ கொள்கையிலிருந்து எள் முனையும் மாறவில்லை அவர்களின் உடல் சித்தரவதையால் சின்னா பின்னப் படுத்தப்பட்டு கசையடி, அடி உதை என தண்டனைகள் அதிகரிக்கப்பட்டும் கூட ”அஹதுன் அஹதுன்’ (இறைவன் ஒருவனே, இறைவன் ஒருவனே) என்றே கூறினார்கள்.

இத்தண்டனைகள் சித்தரவதைகள் யாவுமே பிலால் (ரலி) அவர்கள் கொண்டிருந்த ஏகத்துவக் கொள்கையை மேன்மேலும் உறுதிப் படுத்தவே உதவியது. இறுதியில் அபூபக்கர் அவர்கள் அவரது எஜமானனிடம் இருந்து விலை கொடுத்து வாங்கி பின்னர் அவர்களை விடுதலை செய்தார்கள்.

## அந்தஸ்தை உயர்த்திய இஸ்லாம்

மதினாவிற்கு இடம் பெயர்ந்தபின் நபி (ஸல்) அவர்களுடன் இருந்த

பிலால்(ரலி) அவர்களின் நடைமுறைகள் நபிகளாரைக் கவர்ந்தன. மதீனா பள்ளியில் மக்களை தொழுகைக்கு அழைக்கும் பாங்கு கூறும் பணிக்கு நபி(ஸல்) அவர்கள் பிலால்(ரலி)யை நியமிக்கிறார்கள். அபிஷீனிய அடிமைக்கு இத்தனை பெரிய அந்தஸ்த்தா? என இணைவைப்பாளர்கள் எரிச்சலடைந்தனர்..

பிலால் (ரலி) பத்ருப் போரில் பங்கெடுத்துக் கொண்ட நபித்தோழர்களில் ஒருவர். அப்போரில் தன்னைக் கொடுமைப்படுத்தி சித்திரவதைகள் நடத்திய முன்னாள் எஜமான் உமைய்யாவை கொல்லும் வாய்ப்பு பிலால் (ரலி) அவர்களுக்கே கிடைத்தது. மக்கா வெற்றி கொள்ளப் பட்டதும் அல்லாஹ்வின் ஆலயமாம் க.ஃபாவில் நபி(ஸல்) அவர்களுடன் நுழைந்த மூவரில் பிலால் (ரலி) அவர்களும் ஒருவர். அங்கிருந்த சிலைகளை அடித்து நொறுக்கி அப்புறப் படுத்திய பின்னர் முதன் முதலில் பாங்கோசையை முழங்கியவரும் அவரே. .

# அடிமைகளை விடுவித்த அபூபக்கர்(ரலி)

● அம்ர் இப்னு அதீ என்பவனின் அடிமைப் பெண் இஸ்லாத்தை ஏற்றார். அவரை (அப்போது இஸ்லாத்திற்கு எதிரியாக இருந்த) உமர் (ரலி), தான் களைப்படையும் வரை சாட்டையால் அடித்துவிட்டு “நீ மரணிக்கும்வரை உன்னை நான் விடமாட்டேன்” என்று கூறுவார். அதற்கு அப்பெண்மணி “அப்படியே உமது இறைவனும் உம்மைத் தண்டிப்பான்” என்று கூறுவார். (இப்னு ஹிஷாம்)

● இஸ்லாமை ஏற்றதற்காக கொடுமை செய்யப்பட்ட அடிமைப்பெண்களில் நஹ்திய்யா (ரழி) என்பவரும் அவரது மகளும் அடங்குவர். இவ்விருவரும் அப்துத்தான் கிளையைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் அடிமையாக இருந்தனர். (இப்னு ஹிஷாம்)

● இஸ்லாமை ஏற்றதற்காகக் கொடுமை செய்யப்பட்ட ஆண் அடிமைகளில் ஆமிர் இப்னு புஹைரா (ரலி) என்பவரும் ஒருவர். நினைவிழந்து சித்தப் பிரமை பிடிக்குமளவு அவரை கொடுமைப்படுத்தினார்கள். (இப்னு ஹிஷாம்)

இம்மூவரையும் அபூபக்கர் (ரலி) விலைக்கு வாங்கி உரிமை விட்டார்கள். இதைக் கண்ட அவர்களது தந்தையான அபூ குஹா.ஃபா “நீ பலவீனமான அடிமைகளை விலைக்கு வாங்கி உரிமை விடுகிறாய். திடகாத்திரமான ஆண் அடிமைகளை வாங்கி உரிமையளித்தால் அவர்கள் உனக்கு பக்கபலமாக இருப்பார்களே!” என்றார்.

அதைக் கேட்ட அபூபக்கர் (ரலி) அவர்கள் “நான் அல்லாஹ்வின் திருப்தியை நாடியே செய்கிறேன்” என்றார்கள். அல்லாஹ் அவர்களைப் புகழ்ந்தும் இஸ்லாமின் எதிரிகளை இகழ்ந்தும் குர்ஆன் வசனங்களை இறக்கினான்.

(மக்காவாசிகளே!) கொழுந்து விட்டெயும் நெருப்பைப் பற்றி நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றேன். மிக்க துர்பாக்கியம் உடையவனைத் தவிர, (மற்றெவனும்) அதற்குள் செல்ல மாட்டான். அவன் (நம்முடைய வசனங்களைப்) பொய்யாக்கிப் புறக்கணித்துவிடுவான். (அல்குர்ஆன் 92:14-16)

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள துர்பாக்கியமுடையவன் உமைய்யாவும் அவனுடைய வழியில் முஸ்லிம்களை கொடுமைப்படுத்தியவர்களுமாவர்.

# அடி உதைக்கு அடிபணியாத அடிமை!

மக்காவில் ஒருநாள் உம்மு அன்மார் எனும் பெண்மணி ஓர் அடிமையை வாங்குவதற்காக சந்தைக்குப் போனார். இன்று நாம் வேலைக்கு ஆள் வைத்துக் கொள்வதுபோல் அப்பொழுது அவர்களுக்கு அடிமைகள் வைத்துக் கொள்வது சௌகரியம், பெருமையான காரியம். விற்பனைக்கு நிறுத்தப்பட்டிருந்த சிறுவர்களிலேயே இளையவனாய், பருவ வயதை அடையாத ஒரு சிறுவனைத் தேர்ந்தெடுத்தார். நல்ல ஆரோக்கியத்துடன் புத்திசாலியாய் இருந்தான் அவன்.

பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது பேச்சுக் கொடுத்தார்.

"உன் பெயர் என்ன?"

"கப்பாப்"

"தகப்பனார் பெயர்?"

"அல் அரத்"

"எந்த ஊர் உனக்கு?"

"நஜ்து"

"ஹா! அப்படியானல் நீ ஓர் அரபியா?" ஆச்சரியமாய்க் கேட்டார்.

"ஆம். நான் பனூ தமீம் கோத்திரம்"

"எப்படி அடிமைச் சந்தைக்கு வந்து சேர்ந்தாய்?"

"எங்கள் கோத்திரத்தாரின் நிலங்களை பாலை அரபிகள் படையெடுத்து வந்து தாக்கினர். விலங்குகளையெல்லாம் கைப்பற்றி, பெண்களைக் கடத்திக் கொண்டு, என்னைப் போன்ற சிறுவர்ககளையெல்லாம் அடிமைகளாக விற்று விட்டனர். நான் பலர் கை மாறி மக்கா சந்தைக்கு வந்துவிட்டேன்".

மக்காவிலுள்ள நல்லதொரு கொல்லனிடம் வேலை கற்றுக்கொள்ள கப்பாபை அனுப்பி வைத்தார் உம்மு அன்மார். வாள்கள் தயாரிக்கும் பணி. சேர்ந்த சில நாட்களிலேயே அந்த வேலையில் நிபுணர் ஆகிவிட்டார் கப்பாப். எனவே அவர் சற்று வளர்ந்தவுடன் உம்மு அன்மார் தனியாகப் பட்டறை வைத்துக் கொடுத்து விட்டார். கப்பாபின் திறமையால் கடை வெற்றியடைய அடிமையின் தலைவிக்குக் கொழுத்த இலாபம். கடை பிரபல்யமடைந்துவிடவே, "நல்ல அருமையான வாள் வேண்டுமா, நட கப்பாப் கடைக்கு" என்று படையெடுக்க ஆரம்பித்தனர். வேலை நேர்த்தி மட்டுமல்ல, நம்பிக்கையும் நாணயமும் அதற்குக் காரணம்.

அவர் தயாரிக்கும் வாள் போலவே இயற்கையாகவே புத்திக் கூர்மையும் பக்குவமும் இளைஞர் கப்பாபிடம் இருந்தன. நிறைய யோசித்தார். மக்காவில் அப்பொழுது நிலவி வந்த அறியாமைக் கால சீர்கேடுகள் ஒழுக்கக் கேடான வாழ்க்கைமுறை - இவையெல்லாம் தவறு என்று ஆழ்மனதில் நிச்சயமாய் அவருக்குப் பட்டது. இது ஒரு முடிவுக்கு வந்தாகத்தான் வேண்டும் என்று அவருக்குள் ஒரு இனந்தெரியா நம்பிக்கையும் இருந்தது.

இவ்வாறு இருக்கையில்தான் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் பிரச்சாரத்தைக் கேள்விப்பட்டார் கப்பாப். என்னதான் சொல்கிறார் கேட்டுத்தான் பார்ப்போமே என்று ஆவலில் ஒருநாள் சென்றார் கப்பாப். சட்டென்று உணர்ந்து கொண்டார். ஆம், இது உண்மை! இது புனித வழி! இது சத்தியம்! அவ்வளவுதான். உடனே ஆரத்தழுவி நுழைந்து கொண்டார் இஸ்லாத்தில்.

முஹம்மத் (ஸல்) இஸ்லாத்தை மக்காவின் மக்கள்முன் வைக்க ஆரம்பித்தவுடனேயே அப்பட்டமாய் ஏற்றுக்கொண்ட மிகச்சிலரில் அவர்தான் ஆறாவது நபர்.

குரைஷிகளின் குழுவொன்று ஒருமுறை வாள்கள் சில கப்பாபிடம் செய்யக் கேட்டிருந்தனர். அவர்கள் வந்து பார்த்தபோது கப்பாப் இல்லை. எனவே சற்று ஆச்சரியத்துடன் காத்திருந்தனர்.

சிறிது நேரம் கழித்து கப்பாப் வந்து சேர்ந்தார்.

"அவரைப் பார்த்தீர்களா? அவரது பேச்சைக் கேட்டீர்களா?" என்று கேட்டார் கப்பாப்.

வந்தவர்களுக்கு புரியவில்லை. ஏளனமாய் அவர்களில் ஒருவன் "நீ அவரைப் பார்த்தாயா கப்பாப்?"

"யாரை?"

கேட்டவனுக்குக் கோபம் வந்தது. அவரது பதில்கேள்வி அவனுக்கு ஏளனமாய்த் தெரிந்தது. "நீ யாரைச் சொன்னாயோ அவரை"

"ஆம் நான் அவரைப் பார்த்தேன். உண்மை அவரது பக்கத்திலிருந்து வெளிவருவதைப் பார்த்தேன். ஒளி அவரது வாயிலிருந்து வெளிப்படுவதைப் பார்த்தேன்"

வந்தவர்களுக்குப் பொறி தட்டியது. "யாரைப் பற்றிச் சொல்கிறாய் உம்மு அன்மாரின் அடிமையே?"

தான் ஏற்றுக் கொண்ட இஸ்லாத்தை அவர் மறைக்க விரும்பவில்லை. "அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் உண்மையே பேசுகிறார், நான் அதை ஏறறுக் கொண்டேன்" என்று சொல்லிவிட்டார்.

அவ்வளவுதான். செய்தி உடனே உம்மு அன்மார் காதுக்கு எட்டியது. கடுமையான கோபம் கொண்டார் எஜமானி. தன் சகோதரன் சிபா இப்னு அப்துல் உஸ்ஸா வரவழைக்கப்பட்டான்.

அவனது மிரட்டல்களுக்கெல்லாம் சிறிதும் மசியவில்லை கப்பாப். நிதானமாய் ஆனால் தெளிவாய் உறுதியான மொழியில் சொன்னார்: "அல்லாஹ் ஒருவனே, அவனுக்கு இணையில்லை என்று நம்பிவிட்டேன். உங்களது கடவுளர் சிலைகளைகளின்மேல் எனக்கு இனி நம்பிக்கையெல்லாம் இல்லை. அந்த முஹம்மத் ஏக இறைவனின் அடிமையும் தூதருமாவார் என்று வாக்குமூலம் அளிக்கிறேன்"

அவர் சொல்லி முடிக்கவில்லை. சிபாவும் அவனது கூட்டமும் அவர் மேல் பாய்ந்தது. அவரைக் கீழே தள்ளி உதைத்து அவர் கடையில் இருந்த இரும்பு சாமான்களை எடுத்தே அவரைத் தாக்கினார்கள். அவர் சுயநினைவற்றுக் கீழே விழுந்தார் கப்பாப்.

பாலைவனத்தில் செய்தி காட்டுத் தீயாய் பரவியது. ஒரு அடிமை தன் எஜமானியை மீறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் அதை பகிரங்கமாக எடுத்துரைப்பதும் குறைஷிகளுக்கு புதுவகையான செய்தியாக இருந்தது. அடிமைகள் இவ்வாறு நடந்து கொள்வது அவர்கள் இதுவரை கேள்விப்படாத ஒன்று. ஒரு அடிமையிடம் அவர்கள் முதன் முதலாய்க் கண்ட அந்தத் தைரியம், மக்கத்துக் குரைஷித் தலைவர்கள்வரை சென்று குலுக்கியது.

ஒரு கொல்லன், அதுவும் அடிமை, தன்னைக் காப்பதற்கு உறவுகளற்றவன், புகலிடம் பெறக் கோத்திரமற்றவன். அவன் துடுக்குத்தனமாய்த் தன்

எஜமானியைத் தூக்கியெறிந்துவிட்டு, நம் கடவுளர்களையெல்லாம் அவமதித்து, மூதாதையர் சமயத்தை உதறித் தள்ளிவிட்டுப் போவதா? வெகுண்டெழுந்தார்கள் அவர்கள்.

அதேவேளையில் கப்பாபின் மனவுறுதி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மற்ற தோழர்களுக்கு தைரியத்தை கொடுத்தது. அவர்களில் சிலரும் தங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதை பகிரங்கமாக அறிவித்தார்கள். தலைவர்களுக்கு இனியும் பொறுத்திருக்க விருப்பமில்லை.

அபூஸு்ஃப்யான் இப்னு ஹாரித், அல்-வலீத் இப்னு அல்-முகீராஹ், அபூ ஜஹ்ல் எனும் அம்ரிப்னு ஹிஷாம் இவர்கள் மூவரும் மக்கத்துக் குரைஷியர்களின் முக்கியத் தலைவர்கள். பணம், பலம், செல்வாக்கு மிக்கவர்கள். அவர்கள் கஅபாவில் ஒன்று கூடினார்கள். ஆலோசனை செய்தார்கள்.

இஸ்லாத்தின் பரவல் தங்கள் ஆதிக்கத்தைக் குலைக்கும் என்பதை உணர்ந்தார்கள்.

"இது நமது சமூகத்தில் புரையோடுவதற்குள் ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஒவ்வொரு குலமும் அவர்களது கோத்திரத்தில் யார் யார் முஹம்மதை ஏற்றுக்கொண்டேன் என்று கிளம்பியிருக்கிறார்களோ, அவர்களை வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பை ஏற்க வேண்டும்." என்ற தீர்மானத்திற்கு வந்தார்கள்.

சிபா இப்னு அப்துல் உஸ்ஸா அவன் கூட்டாளிகளுக்கு கப்பாப் இப்னு அரதை (ரலி) கவனிக்கும் பொறுப்பு தானாகக் கிடைத்தது. கொடுமையாய் சித்ரவதை செய்ய வேண்டும், என்ன செய்யலாம்? ஒரு யோசனை உதித்தது. மக்காவின் உச்சி வெயில் மண்டையின் உள்ளே இருக்கும் மூளையையெல்லாம் உருக்கும் நேரம்வரைக் காத்திருந்தார்கள். பிறகு திறந்த வெட்டவெளிக்கு அவைரை இட்டுச் சென்று அவரது உடலிலுள்ள உடைகளை உருவிவிட்டு இரும்பாலான போர்க்கவசத்தை அணிவித்தார்கள். அப்படியே அந்த வெயிலில் அவரைப் படுக்கப் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இரும்பும் சூடேறி உடலை ரணகளப்படுத்தும். தாகத்தினால் உயிர் போகும்....

"இப்போது சொல். அந்த முஹம்மத் யார்?"

"அவர் அல்லாஹ்வின் தூதர். நேர்வழி காட்டும் மார்க்க ஒளியை எடுத்து வந்திருக்கிறார், நம்மையெல்லாம் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு இட்டுச் செல்வதற்கு" பதில் மட்டும் ஏதும் பாதிப்படையாமல் அதே உறுதியுடன் தெளிவாக வந்து கொண்டிருந்தது.

அதைக் கேட்டதுதான் தாமதம்... அடுத்து மிருகத்தனமாய் அடி, உதை தொடர்ந்தது.

"லாத் மற்றும் உஸ்ஸா பற்றி என்ன நினைக்கிறாய் சொல்?" லாத் மற்றும் உஸ்ஸா என்பவை மக்காவில் அப்போது பிரபல்யமான கடவுளர் சிலைகள்.

"அவையிரண்டும் செவிட்டு ஊமைச் சிலைகள். யாதொரு நன்மையோ தீங்கோ செய்ய இயலாதவை." அதைக் கேட்டு மேலும் ஆத்திரம் ஊற்றெடுத்தது.

கற்களை நெருப்பில் இட்டு சுட்டு, தீ கொழுந்து விட்டு எரிந்து அந்தக் கற்கள் நெருப்புத் துண்டுகளாய் ஆகும்வரைக் காத்திருந்தார்கள். பின்னர் அவரை அந்த நெருப்புக் கங்குகளின்மேல் போட்டு மேலும் கீழுமாய் இழுத்தார்கள். அவரது முதுகுச் சதைத் துண்டுகள் அந்தத் தீயினால் வெந்து விழ, பிறகு

அந்தத் தீ அணைந்தது. அது அவரது காயத்திலிருந்து வழிந்து விழுந்த கொழுபபினால்.

வெறும் தீயினால் சுட்ட புண்ணாக மட்டும் இருந்திருந்தால் உள்ளாறியிருக்கும். ஆனால் சதைத் துண்டுகளையே பொசுக்கி எடுத்துவிட்டால்?

மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து அன்சார்களின் அன்பு அரவணைப்பில் தஞ்சம் புகும் வரை சித்திரவதைகளுக்கு நடுவேதான் வாழ்ந்தார் கப்பாப்.

# .அநீதிக்கு உள்ளானோரின் பிரார்த்தனை

● “அநீதியிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை விஷயத்தில் அல்லாஹ்வைப் பயந்து கொள்! ஏனென்றால் அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் திரை கிடையாது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

இஸ்லாத்தை ஏற்றதற்காக தன் அடிமையான கப்பாபின் மீது உம்மு அன்மார் என்ற பெண் தன் சகோதரன் சிபா மூலம் மிகவும் கடுமையான தண்டனைகளையும் சித்திரவதைகளையும் அரங்கேற்றினாள். இந்தக் கொடுமையெல்லாம் போதாது என்று அவள் தன் பங்குக்கு கூடுதலாக சித்ரவதைகள் செய்தாள். ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்) கப்பாபின் பட்டறை வழியாக நடந்து சென்றவர்கள் கப்பாபைப் பார்த்துவிட்டு, நின்று சற்று நேரம் ஏதோ பேசிவிட்டு நகர்ந்தார்கள் பொறுக்க முடியவில்லை உம்மு அன்மாருக்கு. பட்டறைக்கல்லில் இருந்து பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியொன்றை எடுத்து வந்து கப்பாபின் தலையில் சூடு போட்டாள். பிறகு அதை ஒரு தினசரி வழக்கமாகவே ஆக்கிக் கொண்டாள்.

சதை பொரிக்க ஆரம்பிக்கும். அதற்கு மேல் சுயநினைவு தங்க மறுத்து மயக்கமுறும் நிலையில் கப்பாப் இறைந்து துஆ கேட்டுவிட்டார் ஒருநாள் ”அல்லாஹ்! இவர்கள் இருவரையும் பழிவாங்குவாயாக!”. அந்த துஆ இறைவனை திரையின்றி அடைந்து விட்டது போலும்.

கடைசியில் இஸ்லாமிய இயக்கம் தொடங்கிய பின் பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு மக்காவை விட்டு மதீனாவிற்கு புலம்பெயர (ஹிஜ்ரத்) அனுமதி கிடைத்தது. கப்பாப் தனது ஹிஜ்ரத்துக்கு தயாராகிக் கொண்டிருந்த நிலையில் அது நிகழ்ந்தது. அவரது துஆவின் ஒரு பகுதிக்கு இறைவன் பதிலளிக்க ஆரம்பித்தான்.

உம்மு அன்மாருக்கு திடீரென்று தலைவலியொன்று உண்டானது. அது அதிகமாயிற்று. பிறகு தீவிரமாயிற்று. மிகத் தீவிரமாயிற்று. யாரும் அப்படியொன்று கேள்விப்பட்டிராத தலைவலி. வலியின் கொடுமையால் அவள் கத்துவது நாய் ஊளையிடும் சப்தம் போலிருந்தது. மிரண்டுபோன அவளுடைய மகன் வைத்தியர் மாற்றி வைத்தியரிடம் தூக்கிக் கொண்டு ஓடியும் யாருக்கும் தலைவலிக் காரணம் புரியவில்லை.

சூட்டுக்கோல் வைத்திய முறை அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்தது. கடைசியில் அவளுடைய நோய்க்கு அதைத்தான் ஒரு வைத்தியர் பரிந்துரைத்தார். அதன்படி பழுக்கக் காய்ச்சிய கம்பியைக்கொண்டு அவளுக்குத் தலையில் சூடு இட்டார்கள்.

தனது துஆவின் இரண்டாவது பகுதியை உஹது யுத்தத்தின் போது இறைவன் நிறைவேற்றுவதைக் கண்டார் கப்பாப். நபியவர்களின் சிற்றப்பாவான ஹம்ஸா (ரலி) அவர்களால் அந்தப் போரில் சிபா இப்னு அப்துல் உஸ்ஸா கொல்லப்பட்டான்.

ஆசிரியர் உரை

# எதிர்த்து நிற்க என்ன தடை?

'இறைவன் ஒருவன் மட்டுமே வணக்கத்துக்குரியவன்' என்ற சத்தியத்தை ஏற்றதனாலும் பிரச்சாரம் செய்ததனாலும் நபிகள் நாயகமும் தோழர்களும் மக்காவில் பதிமூன்று வருட காலம் தொடர்ச்சியாக சித்திரவதைகளை அனுபவிக்க வேண்டி இருந்தது. எவ்வாறு இவர்களால் இதைத் தாங்க முடிந்தது? கொடுமையாளர்களுக்கு எதிராக இவர்கள் ஒன்றுமே செய்யவில்லையா? எண்ணிக்கைப் பெருகும் போது எதிர்த்து நிற்கலாமே? இதற்கு என்ன தடை? இதைத்தான் நாம் நபிகளாரின் நடைமுறையில் இருந்து முக்கியமாக பாடம் கற்கக் கடமைப் பட்டுள்ளோம்.

## பொறுமை என்ற ஆயுதம்

ஆம், தன்னை மக்கள் தாக்கியபோதும் நபிகளார் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்கள். தன் சகாக்கள் தாக்கப் பட்டபோதும் பொறுமையை மேற்கொள்ளுமாறு பணித்தார்கள். இறைவனின் கட்டளைகளை அவர்களுக்கு நினைவூட்டினார்கள்.

● நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும் உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார். (திருக்குர்ஆன் 41 : 34)

● அவர்கள் சகித்துக் கொண்டதாலும், நன்மையின் மூலம் தீமையைத் தடுத்ததாலும், அவர்களுக்கு நாம் வழங்கியதை (நல்வழியில்) செலவிட்டதாலும் அவர்களுக்கு இரண்டு தடவை அவர்களின் கூலிகள் வழங்கப்படும். (திருக்குர்ஆன் 28 :54)

மக்காவிற்கு அருகே இரு மலைகளுக்கு இடையே அமைந்திருந்த தாயிப் நகரில் தனது பிரச்சாரத்திற்காக சென்ற போது மிக மிகக் கடுமையாக கல்லால் அடித்துத் துரத்தப் பட்டார்கள் நபிகளார். இரத்தம் தோய்ந்த உடலோடு கண்ணீர் மல்க இறைவனிடம் பிரார்த்தித்தார் நபிகளார். உடனே தனது வானவர்களை அனுப்பிவைத்தான் இறைவன். "ஆணையிடுங்கள் நபியே, உங்களை வேதனைக்குள்ளக்கிய இவ்வூர் மக்களை இம்மலைகளுக்கிடையில் நசுக்கிவிட நாங்கள் தயார்!" என்றார்கள் வானவர்கள். ஆனால் கருணை வடிவான நபிகளார் என்ன சொன்னார்கள் தெரியுமா? "இன்று இவர்கள் ஏற்காவிட்டாலும் இவர்களின் தலைமுறைகளில் இருந்து நல்லோர் உருவாவார்கள் என்று நம்புகிறேன்" என்று கூறி அவர்களைத் தடுத்தார்கள்.

## மக்களை அழிப்பதல்ல திருத்தி எடுப்பதே நோக்கம்

ஏனெனில் இங்கு தாக்குபவர்கள் நமக்கு எதிரிகளே அல்ல. அவர்களைப் பீடித்துள்ள ஷைத்தான்தான் நமக்கு எதிரி. பொறுமை மூலமும் விவேகத்தைக் கைக்கொள்வது மூலமும்தான் இம்மக்களைத் திருத்தியெடுத்து நேர்வழிக்குக் கொண்டுவர முடியும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தார்கள் அண்ணல் நபிகளார்.

தங்களுக்கு ஏற்படும் சோதனைகள், சித்திரவதைகள் குறித்து நபித்தோழர்கள் வந்து முறையிட்ட போது நபிகளார் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா? இதோ உடம்பு முழுக்க இரும்புக் கம்பியால்

சூடிடபட்ட வடுக்களைத் தாங்கிய நபித்தோழர் கபாப்(ரலி) அவர்கள் பிற்காலத்தில் கூறுகிறார்கள்: "இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கஅபாவின் நிழலில் தம் சால்வை ஒன்றைத் தலையணையாக வைத்துச் சாய்ந்து கொண்டிருந்த போது அவர்களிடம் (இஸ்லாத்தின் எதிரிகள் எங்களுக்கிழைக்கும் கொடுமைகளை) முறையிட்டபடி எங்களுக்காக (இறைவனிடம்) நீங்கள் உதவி கோர மாட்டீர்களா? எங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்ய மாட்டீர்களா?" என்று கேட்டோம்.

அதற்கு அவர்கள், "உங்களுக்கு முன்னிருந்தவர்களிடையே (ஏகத்துவக் கொள்கையை ஏற்று இறைத்தூதரின் மீது நம்பிக்கை கொண்ட) ஒரு மனிதருக்காக மண்ணில் குழி தோண்டப்பட்டு, அவர் அதில் நிறுத்தப்பட ரம்பம் கொண்டு வரப்பட்டு, அவரது தலை மீது வைக்கப்பட்டு அது கூறுகளாகப் பிளக்கப்படும்.

ஆயினும் அ(ந்தக் கொடுமையான)து அவரை அவரது மார்க்கத்திலிருந்து பிறழச் செய்யவில்லை. (பழுக்கச் காய்ச்சிய) இரும்புச் சீப்புகளால் அவர் (மேனி) கோதப்பட அது அவரது இறைச்சியையும் கடந்து சென்று அதன் கீழுள்ள எலும்பையும், நரம்பையும் சென்றடைந்து விடும். அதுவும் கூட அவரை அவரது மார்க்கத்திலிருந்து பிரழச் செய்யவில்லை. அல்லாஹ்வின் மீதாணையாக! இந்த (இஸ்லாத்தின்) விவகாரம் முழுமைப்படுத்தப்படும். எந்த அளவிற்கென்றால்வாகனத்தில் பயணம் செய்யும் ஒருவர் (யமனில் உள்ள) ஸன்ஆ விலிருந்து ஹளர மவ்த் வரை பயணம் செய்து செல்வார். (வழியில்) அல்லாஹ்வைத் தவிர அல்லது தன் ஆட்டின் விஷயத்தில் ஓநாயைத் தவிர வேறெவருக்கும் அவர் அஞ்ச மாட்டார். ஆயினும் நீங்கள் தான் (பொறுமையின்றி) அவரசப்படுகிறீர்கள்" என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர்: கப்பாப் இப்னு அல் அரத் (ரலி) நூல்: புகாரி3612, 3852*

ஆம், தர்மத்தை பூமியில் நிலைநாட்ட உறுதியான கொள்கைப் பிடிப்பும் அளவுகடந்த பொறுமையும் தேவை என்பதையே எடுத்துரைக்கிறார்கள். மக்களை சீர்திருத்த முயற்சி மேற்கொள்ளும்போது தற்காப்புக்காகக் கூட எதிர்ப்பைக் காட்டவேண்டாம் என்று எச்சரிக்கிறார்கள். கொடுமைகளைத் தாங்க முடியாதவர்களைப் வேறு ஊர்களுக்குப் புலம்பெயர்ந்து செல்ல உத்தரவிட்டார் நபிகளார். கடுமையான பகைவர்களையும் திருத்தி எடுக்க இதுவே வழி என்பதில் உறுதியாக நம்பினார்கள் நபிகளார்.


**மாற்றுமத அன்பர்களுக்கு...**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற தொடர்பு கொள்ளுங்கள்:**

*ஓசூர்: 9994713191 தர்மபுரி: 9842627171 கோவை: 9003555755*
*திருப்பூர் : 9150068919 குன்னூர்: 9843622246 திருச்சி: 9865446344*
*மதுரை: 9789341714 சென்னை: 9944656942/9894442844 சேலம்: 9994091364 கும்பகோணம்: -9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 மயிலாடுதுறை: 9942941190 தென்காசி: 9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994453346 உடுமலை: 9865051914 பழனி: 9791929377 ஊட்டி: 9543963412 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210*
*ஈரோடு: 7373947869 /9942958888* **KGF**: *9845217262*

## வாசகர் எண்ணம்

● நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் மிகவும் அருமையாக வழங்கப் பட்டுள்ளன.

- ஷேக் தாவுது, ஈரோடு.

● அக்டோபர் இதழில் மனிதர்களை இறைவனின் மறு பிரதியாக நினைத்து ஆட்டம் போட்டவர்களின் கொட்டத்தை மலபாரில் அடக்கிய திப்புசுல்தான் பற்றிய பார்வை அருமை. சுற்று சூழலை மாசுபடுத்துவோருக்கு இவ்வுலகின் உரிமையாளன் விடுத்த எச்சரிக்கைகள் உலகெங்கும் கொண்டுசெல்லப்பட வேண்டும்.

- தஞ்சை என்.ஜே. கந்தமாறன். சென்னை

● மாஷா அல்லாஹ். இதழ் அருமை. தொடர்ந்து அனுப்பவும்

- ஜே. பரிமேலழகன், குடியாத்தம்.

● அக்டோபர் இதழ் அருமையாக அமைந்துள்ளது.

- டி. ஞானப்பிரகாசம், பெங்களூர்.

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60- ● ஈராண்டு சந்தா Rs.120-

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, #8, 4th cross, 2nd main, LB Sastri nagar, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNE/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, MYSORE ROAD, BANGALORE 560026 on 25th or 26th or 27th of every month. No of pages: 24+4.
Licenced to post without prepayment License No.WPP-308

(PRINTED MATTER)

To

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

● அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் இந்தப் பூமியை அது இறந்தபின் உயிர்ப்பிக்கிறான் இவ்வாறே (மரித்தபின் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 30:19)

